இந்து தமிழ் திசை - 07.01.2023



↑ அவிநாசிலிங்கம் மகளிர் உயர் கல்வி நிறுவனத்தின் பொறியியல் பிரிவுகள் சார்பில் நடைபெற்ற பிரிண்டிங் கண்காட்சியில், ஆஃப்செட் இயந்திரத்தில் ஒரு பக்க காலண்டரை பிரிண்ட் செய்வதை பார்வையிட்ட மாணவிகள்.

# பிரிண்டிங் வரலாறு குறித்து கோவையில் கண்காட்சி

● கோவை

கோவை விழாவின் ஒருபகுதியாக, அவிநாசிலிங்கம் மகளிர் உயர் கல்வி நிறுவனத்தின் கீழ் துடியலூரை அடுத்த வரப்பாளையத்தில் செயல்பட்டுவரும் 7 பொறியியல் பிரிவுகளின் சார்பில் அறிவியல் கண்காட்சி நடைபெற்றது. இதில், பொறியியல் பயிலும் மாணவிகள் பல்வேறு அறிவியல் தொழில்நுட்பங்களை காட்சிப்படுத்தியிருந்தனர். இதனை பல்வேறு பள்ளிகளில் 6 முதல் 9-ம் வகுப்பு பயிலும் மாணவர்கள், கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள் பார்வையிட்டனர்.

நிகழ்வின் ஒருபகுதியாக, பிரிண்டிங் தொழில்நுட்ப பிரிவு, சேலம் ஆஃப்செட் பிரிண்டர்ஸ் ஆகியவை இணைந்து பிரிண்டிங் வரலாறு குறித்த புகைப்படங்களை காட்சிப்படுத்தியிருந்தனர். அதில், முதல் பிரிண்டிங் இயந்திரம், முதல் அச்சு புத்தகம், முதலில் அச்சான தமிழ் நூல், 16-ம் நூற்றாண்டிலிருந்து பயன்படுத்தப்படும் எழுத்துகள், மை, காகிதம் ஆகியவற்றின் வரலாறு உள்ளிட்டவற்றின் புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. மேலும், முதல் அச்சு இயந்திரத்தின் சிறிய மாதிரியும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. பிரிண்டிங் சங்கத்தைச் சேர்ந்த ஒருவர், இந்தியாவின் பழங்கால நாணயங்கள், ரூபாய் நோட்டுகள், ஸ்டாம்புகள் ஆகியவற்றை காட்சிப்படுத்தியிருந்தார். ஆஃப்செட் இயந்திரத்தில் ஒரு பக்க காலண்டரை பிரிண்ட் செய்வது எப்படி என பார்வையாளர்களுக்கு நேரடியாக செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.